முருகப்பெருமான் துணை

**மகான் அல்லமாபிரபு அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.07.2021, செவ்வாய்கிழமை

1. அவதார ஞான சொரூபமே
அண்ணலாக வந்த தேசிகனே
புவனம் நல்மாற்றம் காண
புண்ணிய வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே அல்லமாபிரபு யானும்
அருளுவேன் துல்லிய ஆசி
வரங்களென பிலவ மிதுனதிங்கள்
வல்லமையான இருபான்நவதிகதி குசன்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 29ம் நாள், 13.07.2021 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் உலகநலம்காண உரைப்பேன்
வடிவேலன் சூட்சும ஞானபடைப்பு
ஆறுமுக அரங்கனாக இருக்க
அவதாரம் அறிந்து தெளிந்தமக்கள்
4. மக்களெல்லாம் பிரணவக் குடிலின்
மகத்துவம் அறிந்து வந்து
தேக்கமின்றி ஞானம் பயில
தெய்வநெறி ஏற்று வணங்க
5. வணங்கவே ஆறுமுகன் அருள்
வழிகாட்டி உலக உயிர்காக்கும்
வணங்கவே உயர்பண்புகள் கூடி
வல்லமையான சமூக பலம்காணும்
6. காணவே நல்வழி மாற்றங்களும்
காப்புதரும் சேவைகளும் பெருகி
ஞானவான்கள் தலைமை வர
நல்ல தேற்றங்கள் உருவாகும்
7. ஆகவே ஞானத் தலைவனாம்
ஆறுமுகனார் நெறி கண்டமக்கள்
மகான்கள் ஆகும் வாய்ப்பும்
மகத்துவமும் கண்டு சிறப்பர்
8. சிறப்புதரும் மெய்ஞான மார்க்கம்
சிந்தை தெளிவிக்கும் மார்க்கம்
மறுப்பின்றி அரங்கன் அவதார
மார்க்கமாக கலந்து வருக
9. வருகவே ஏற்றுத் தொடருவீர்
வணங்கி தருமமும் தருவீர்
முருகா எனவழங்கும் தருமம்
மூவுலகும் கேட்கப் பெறுவதாலே

10. ஆதலால் மானுட தர்மமும்
ஆசியாக வானவரின் வரமாக
பூதலத்தில் அங்கீகாரம் பெற்று
புண்ணியவான்கள் எனும்படை உருவாகி

11. ஆகியே உலகம்மாற்றம் பெறும்
அரங்கன் தலைமைக்கு வரும்
மகிழவே ஞானவளர்ச்சி பெற்று
மண்ணுலகம் ஞானஆட்சி காணும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—